செ.வெ.எண் : 04/பிப்ரவரி நாள்: 04.02.2019

## இராமநாதபுரம் மாவட்டம்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து 4 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.2 இலட்சம் உதவித்தொகை

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (04.02.2019) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்று, பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை தந்த பொதுமக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கோரிக்கை மனுக்கள் பெற்று, அம்மனுக்களை ஆய்வு செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காண வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக 1 பயனாளிக்கு ரூ.30,200/- மதிப்பிலான நவீன செயற்கைக்கால் உபகரணம், 3 பயனாளிகளுக்கு தலா ரூ.7,170 வீதம் மொத்தம் ரூ.21,510/- மதிப்பிலான மூன்று சக்கர நாற்காலிகளையும், வருவாய்த் துறையின் சார்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து 4 பயனாளிகளுக்கு தலா ரூ.50,000/- வீதம் மொத்தம் ரூ.2 இலட்சத்திற்கான காசோலைகளையும் என மொத்தம் 8 பயனாளிகளுக்கு ரூ.2,51,710 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு கோரிக்கை மனுக்களை வழங்குவதற்காக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தந்த மாற்றுத்திறனாளிகள் சிரமப்படாத வகையில் அவர்களுக்கு சிறப்பு அமர்விடம் ஏற்படுத்தப்பட்டு, அவர்களிடத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரடியாகச் சென்று கோரிக்கை மனுக்களைப் பெற்றார். மேலும், இக்கூட்டத்தில் கோரிக்கை மனுக்களை வழங்கிய அனைத்து நபர்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உணவு பொட்டலங்களை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி சி.முத்துமாரி, சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.இரா.திருஞானம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) டாக்டர் எஸ்.எஸ்.கண்ணபிரான் உள்பட அனைத்துத் துறை அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**